DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 94/2021

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | சஞ்சீவி |
| Father / Husband Name | பெருமாள் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 12.**06.2025**

**குறுக்கு விசாரணை**

1. எனக்கு நிரந்தர முகவரி வேளச்சேரி என்றால் சரிதான். எதிரி கோபிநாத் எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது நிலத்தின் பக்கத்தில் அவர் நிலம் உள்ளதால் அவரை எனக்கு தெரியும். எனது நிலம் மதுராந்தகம் வட்டம் ஆணைக்குன்றம் கிராமத்தில் உள்ளது. போலிசார் என்னை விசாரித்தார்கள். ஆனால் எனது நிலத்தை விஸிதீரனம் குறித்து விசாரிக்கவில்லை. போலிசார் விசாரணையில் எனக்கு ஆணைக்குன்றம் கிராமத்தில் பூர்வீக நிலம் உள்ளது என்ற விவரத்தை போலிசார் கேட்கவில்லை நானும் சொல்லவில்லை. எனக்கு ஆணைக்குன்றம் கிராமத்தில் பூர்வீக இடம் இல்லை என்றாலும் நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதால் போலி ஆவணங்களை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2. எதிரி கோபிநாத்திடம் மருவூரில் உள்ள அவரின் வீட்டில் வைத்து அக்ரீமெண்ட் போட்டோம். 27.12.2019 ம் தேதி அக்ரீமெண்ட் போட்டு அன்றைய தினமே பணத்தை கொடுத்துவிட்டேன். அசாஆ 3 ல் ஒப்பந்தம் செய்த தேதி 21.09.2016 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் கோபிநாத்துடன் செய்துகொண்டு முதல் கிரைய ஒப்பந்தமாகும். மேற்படி ஒப்பந்தத்தை போலிசார் விசாரணையிலும் நீதிமன்ற விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் போலிசார் விசாரணையிலும் நீதிமன்ற விசாரணையிலும் சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.3 ஆவணத்தை யார் வாங்கினார் என்றால் கோபிநாத் வாங்கினார். பொதுவாக பத்திரத்தை யார் வாங்கினார்களோ அவர் பெயரில் தான் பத்திரம் கொடுக்கப்படும் எனக்கு தெரியாது. எந்த தேதியில் யார் பெயரில் பத்திரம் வாங்கி வந்தார் என்று எனக்கு தெரியாது. மேற்படி ஆவணம் எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. கோபிநாத்திற்கு தான் தெரியும். அ.சா.ஆ.3 ஆவணத்தை தயார் செய்யும் போது யார் யார் உடன் இருந்தார்கள் என்றால் அருணாச்சலம் தங்கராஜ் மற்றும் எதிரியின் மனைவி ஆகியோர் இருந்தார்கள்.

3. அ.சா.ஆ.3 ஆவணம் 28.10.2017 ல் வாங்கப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.ஆ.3 ஆவணத்தில் சஞ்சீவீ என்ற பெயரில் RT கிருபாகரன் வேளச்சேரி என்று முத்திரை விற்பணையாளரிடமிருந்து பெறப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். போலிசார் விசாரிக்கும் போது அ.சா.ஆ.3 ஆவணத்தை காண்பித்து ஆவணத்தை கொடுத்தீர்களா என்றால் ஆவணத்தின் நகல் கொடுத்தேன். அ.சா.ஆ.3 ன் அசல் ஆவணம் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். நான் ஏன் அ.சா.ஆ.3 அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை என்றால் செங்கல்பட்டு நீதிமனத்தில் ஆவணம் சம்மந்தமாக வழக்கு உள்ளதால் அதற்கு தேவைப்படும் என்பதால் நான் நகலை கொடுத்தேன். நான் இங்கு குற்றவழக்கை தாக்கல் செய்தபிறகுதான் செங்கல்பட்டில் சிவில் வழக்கு தொடங்கினேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கிலும் கோப்பிநாத்திற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் சொத்து எனக்கு வேண்டும் என்றுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 1/2021 ஆகும். அ.சா.ஆ.3 ன் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் கையெழுத்து நிபுணர் மூலம் உண்மை தெரிய வரும் என்பதால் நான் அசல் ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

4. நான் எதிரிக்கு சிறுகசிறுக கொடுத்த பணத்திற்கான ஆவணத்தை போலிசாரிடம் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை போலிசார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்களா என்றால் எனக்கு தெரியாது. நான் எந்த ஒரு ஆவணத்தையும் போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் ஆவணத்தை கொடுத்ததாக இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி அசல் ஆவணங்கள் தொலைந்து விட்டது என்று காவல் நிலையத்தில் புகார் அளித்து முறைப்படி பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்து அதன் மூலம் அவரது நிலத்தை விற்பணை செய்தார் என்றால் சரியல்ல. அதற்கு முன்னதாகவே கோபிநாத் என்னிடம் பத்திரத்தை எழுதி கொடுத்துவிட்டார். என்னிடம் இருக்கும் அசல் ஆவணத்தை காவல் நிலையத்தில் காண்பித்து கோபிநாத் அவரது ஆவணம் தொலைந்து விட்டதாக கொடுத்த missing certificate ஐ ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் எடுத்தேன். நான் உண்மையில் காவலரிடம் அசல் ஆவணத்தை கொடுக்கவில்லை என்றாலும் அவ்வாறு கொடுத்திருந்தால் அவர்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பார்கள் என்றாலும் சரியல்ல. எதிரி கோபிநாத் தற்போது தாம்பரத்தில் வசிப்பது தெரியுமா என்றால் அவர் மருவூரில் வசிக்கும் போது தான் எனக்கு தெரியும்.

5. எனக்கும் அவருக்கும் கொடுக்கல் வாங்கல் தற்போது உள்ளதா என்றால் இல்லை. எதிரி சென்னை உயர் நீதிமன்றத்தில் Crl.M.P.No.369/2020 ல் முன்ஜாமின் பெற்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி Crl.M.P.No.369/2020 ல் முன்னிலையான அரசு வழக்கறிஞர் எதிரி கோபிநாத் புகாரர்தாருடன் ரூபாய் 22 லட்சத்திற்கு கிரைய ஒப்பந்தம் பேசி அதில் ரூபாய் 7 லட்சம் பெற்றுக்கொண்டதாகவும் விற்பணை பத்திரம் எக்சிகியூட் செய்யப்படவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதன்படி நான் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் திருக்கழுகுன்றத்தில் மனு செய்து ரூபாய் 7 லட்சம் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். காவல் நிலைத்தில் என்னை போலிசார் விசாரிக்கும் போது ரூபாய் 7 லட்சத்தை பெற்றுக்கொண்ட விவரத்தை சொன்னேனா என்றால் சொன்னேன். எதிரி ரூபாய் 7 லட்சத்தை என்னிடம் இருந்து கடனாக பெற்றதை என்னிடம் நீதிமன்றத்தின் வாயிலாக ஒப்படைத்துள்ளார் என்றால் நான் எதிரியுடன் ரூபாய் 4250000

அக்ரீமெண்ட் செய்து ரூபாய் 22 லட்சத்தை தவனை முறையில் எதிரிக்கு செலுத்தினேன் மீதி பணத்தை எதிரிக்கு 10 நாட்கள் கழித்து கொடுப்பதாக கூறினேன். பின்னர் 4 நாட்கள் கழித்து அருணாச்சலம் என்பவர் என்னிடம் எதிரி வேறு நபருக்கு மிஸ்சிங் சர்டிபிகேட் வாங்கி நிலத்தை விற்று விட்டதாக என்னிடம் கூறினார்.

6. பின்னர் அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் என்னையும் எதிரியும் சமாதானம் பேசியதில் நான் எனக்கு நிலம் வேண்டும் பணம் வேண்டாம் என்று கூறினேன். மேற்படி விவரத்தை நான் முதல் விசாரணையிலும் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக மிகைப்படுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அசாஆ 3 ல் 14.09.2016 ம் தேதி ரூபாய் 5 லட்சம் கிரைய அட்வான்சாகவும் பின்னர் 21.09.2016 ம் தேதி அன்று ரூபாய் 5 லட்சத்தையும் 30.10.2016 அன்று ரூபாய் 150000 யும் 08.11.2016 ம் தேதி ரூபாய் 1 லட்த்தையும் 30.10.2017 ம் தேதி ரூபாய் 5 லட்சத்தையும் மொத்தம் அட்வாஸ் தொகை ரூபாய் 1750000 எதிரி பெற்றுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியும் அதற்கான Voucher ஐ நான் வைத்துள்ளேன். அசாஆ 3 ஆவணத்தை நானே போலியாக தயார் செய்து அதில் எதிரியின் கையொப்பத்தை நானே போட்டு அசல் ஆவணத்தை மறைத்து நீதிமன்றத்தில் அதன் நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

7. எதிரிக்கு வழக்கு சொத்தை தவிர்த்து அதன் சுற்றுவட்டாரத்தில் அவரது பெயரில் நிலம் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாம்பரத்தில் உள்ள என்களா ஓட்டலில் நான் கடனாக கொடுத்த 5 லட்சத்தை கொடுத்ததற்கு எதிரி அவரது மருவூரில் உள்ள அவரது வீட்டு பத்திரத்தை செக்கியூரிட்டிகாக கொடுத்தார் என்றால் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பத்திரத்தை தவிற வேறு பத்திரம் எதுவும் கொடுக்கவில்லை. அவ்வாறு எதிரி 5 லட்சம் கொடுக்கும்போது அருணாச்சலம் அசா1 ன் மனைவி பிரபாவதி தங்கராஜ் ஆகியோர் உடன் இருந்தார்கள் என்றால் சரியல்ல. அருணாச்சலம் என்பவர் நில புரோக்கர் மற்றும் தங்கராஜ் என்பவர் வருமானத்துரையில் வேலை செய்து வருகிறார். அசாஆ 4 ஆவணத்தை அச்சிறுபாக்கத்தில் உள்ள ஜெராக்ஸ் கடையில் நில புரோக்கர் அருணாச்சலம் மற்றும் சில நபர்களிடம் கிடைக்கப்பெற்று அந்த ஆவணத்தை அடிப்டையாக வைத்து அசாஆ 3 ஐ போலியாக தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு நான் போலியாக ஆவணத்தை தயார் செய்துள்ளதால் எனது வாய்மொழி சாட்சியமும் ஆவண சாட்சியமும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி போலி ஆவணத்தை கொண்டு செங்கல்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசாஆ 3 ஆவணத்தை வைத்து செங்கல்பட்டு மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கும் விசாரணை இன்றி நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

8. எதிரியின் 1.5 கோடி மதிப்புள்ள நிலத்தினை அபகரிக்க நில புரோக்கர் துணையுடன் நானே போலி ஆவணம் தயார் செய்து எதிரியின் சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற தீய எண்ணதில் இந்த வழக்கையும் மாவட்ட சிவில் வழக்கையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1.5 கோடி சொத்துக்களை எதிரி எனக்கு 22 லட்சத்தை விற்பதற்கு அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்கா எதிரியை மன உலைச்சல் ஏற்படுத்தி எதிரியின் நிலத்தை அபகரிக்க வேண்டும் என்ற தீய எண்ணத்துடன் செய்ல்பட்டு எதிரிக்கு எதிராக போலி ஆவணம் புணைந்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும்

இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. நான் ரூபாய் 22 லட்சத்தை எதிரிக்கு கொடுத்ததற்கான எந்த ஆவணமும் போலிசாரிடம் கொடுக்கவில்லை என்றாலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

9. நான் பணத்தை நேரடியாக எதிரியிடம் கொடுத்தேன். ரூபாய் 15 லட்சத்தை 3 தவணையாக மருவூரில் எதிரியின் வீட்டில் வைத்து அருணாச்சலம் தங்கராஜ் மற்றும் எதிரியின் மனைவி முன்னிலையில் கொடுத்தேன். மீதி பணத்தை Voucher மூலமாகவும் காசோலை மூலமாகவும், எனது வங்கி கணக்கில் இருந்தும் கொடுத்துள்ளேன். மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்ய நான் தயாராக உள்ளேன். பணம் கொடுத்த தேதி ஞாபகம் இல்லை. நான் அவ்வாறு கொடுத்திருந்தால் போலிசார் விசாரணையில் சொல்லியிருப்பேன் என்றாலும் அதற்கான ஆவணத்தை போலிசார் அதை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்திருப்பார்கள் என்றாலும் நான் அவ்வாறு கொடுக்கவில்லை என்பதால் தான் போலிசார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கு எதிராக மிகைப்படுத்தி பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.